Registered as a News Paper    பக்கங்கள் 06    விலை ரூபா: 5-00

நூலகம் ... 03-2-1993 ... யாழ்ப்பாணம்

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily    மக்கள் தினசரி

நாதம் 03    திருவள்ளுவர் ஆண்டு 2024    தை 22    (04-02-1993)    வியாழக்கிழமை    ஓசை 352

## பிறப்பு விகிதம் குறைவு மரண விகிதம் அதிகரிப்பு

யாழ் போதனா வைத்தியசாலையில் கடந்த ஆண்டில் 6309 பிறப்புகளும், 1416 இறப்புகளும் பதிவாகியுள்ளன. சென்ற ஆண்டுடன் ஒப்பிடும் போது இறப்பு விகிதம் அதிகரித்துள்ளதாகவும், பிறப்பு விகிதம் குறைந்துள்ளதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. மரணமடைந்தவர்களில் அரைவாசிக்கு மேற்பட்டோர் சிறுவர்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது. இவ்வாண்டு ஜனவரியில் மட்டும் [5-ம் பக்கம் பார்க்க]

## [ யாழ்ப்பாண குடாநாட்டில் ]

# பஞ்சம் ஏற்படும் அபாயநிலை; நிவாரண நிறுவனங்கள் அறிவிப்பு

## வாணிபம்/தொழில் பதிவு சான்றிதழ் வழங்கல்

கரவெட்டி, பச்சிலைப்பள்ளி, வடமராட்சி கிழக்கு ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் தமது வாணிபம்/தொழில் முயற்சிகளைப் பதிவுசெய்ய விண்ணப்பித்தவர்கள் வாணிபம்/தொழில் பதிவுச் சான்றிதழ்களைப் பின்வரும் நாட்களில் காலை 9.00 மணி தொடக்கம் மாலை 4.00 மணிவரை யாழ்ப்பாணம் கந்தர்மடத்தில் அமைந்துள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் வருவாய்ப் பகுதிச் செயலகத்தில் பெற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

சான்றிதழ்கள் உரிமையாளர்களிடம் மட்டுமே கையளிக்கப்படுமென்பதைக் கவனத்திற் கொள்ளுமாறும் யாழ் மாவட்ட வருவாய்ப் பொறுப்பாளர் வோ. தமிழ்க்குமரன் அறிவித்துள்ளார்.

கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பிரிவு — 05-02-93
பச்சிலைப்பள்ளி உதவி அரசாங்க அதிபர் பிரிவு — 06-02-93
வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவு— 06-02-93

## அரசிற்கு மகஜர் அனுப்ப முடிவு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் அத்தியாவசிய உணவுப் பொருள்களுக்கு பெரும் பற்றாக்குறை தோன்றியுள்ளது. இதனைத் தொடர்ந்து உருவாகப் போகும் உணவுப் பஞ்சம் குறித்து யாழ். மாவட்டத்தில் செயற்படும் அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் கொழும்பு அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்துக்கு அவசர வானொலிச் செய்தி ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

இதற்றைவிட குடாநாட்டில் செயற்படும் பல அரச சார்பற்ற நிறுவனங்கள் கொழும்பில் உள்ள தமது தலைமை அலுவலகங்களுக்கு குடாநாட்டின் தற்போதைய உணவு நிலவரம் குறித்த தகவல்களை அனுப்பிவைத்துள்ளன. தற்போது குடாநாட்டில் அரச உணவுக் களஞ்சியங்களில் மட்டுமல்ல அரச சார்பற்ற நிறுவனங்கள் சிலவற்றினது உணவுக் களஞ்சியங்களிலும் உணவுப் பொருள்களது அளவு தினசரி குறைவடைந்து செல்கிறது.

( 5 ஆம் பக்கம் பார்க்க )

## குடாநாட்டிற்கு வெளியில் பணியாற்றும் அரச உத்தியோகத்தர்கள் போக்குவரத்தின்றி அவதி

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த வெளிமாவட்டங்களில் கடமையாற்றும். சுமார் 40 அரச உத்தியோகஸ்தர்கள் விடுமுறையைக்கழிக்க யாழ்ப்பாணம் வந்திருந்தனர் இவர்கள் விடுமுறையைக்கழித்த பின்னர் தாம் கடமையாற்றும் மாவட்டங்களிற்கு செல்ல முடியாமல் தவிப்பதாக தெரியவருகின்றது.

இதனைத்தொடர்ந்து இவர்களுக்கான போக்குவரத்து ஒழுங்குகளை செய்து தரும்படி யாழ் அரச அதிபர் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளரைக்கேட்டு அவசரவானொலிச் செய்தி ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

இவ்வாறு பாதிக்கப்பட்ட அரச உத்தியோகஸ்தர்கள் கொழும்பு, மன்னார், முல்லைத்தீவு, வவுனியா, கிளிநொச்சி ஆகிய இடங்களில் கடமையாற்றுபவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (பா).

## எறிகணைவீச்சு

கட்டுவன் இராணுவ நிலைகளிலிருந்து நேற்று முன்தினம் இரவு 8.00 மணியளவில் ஏவப்பட்ட எறிகணைகள் சில கட்டுவன் முனியப்பர் கோவிலுக்கு அண்மையில் வீழ்ந்து வெடித்தன. ஓர் எறிகணை வெடிக்காத நிலையில் காணப்பட்டது இவ்எறிகணை வீச்சால் தெய்வாதீனமாக எவரும் காயமடையவில்லை.

மேலும், கடந்த சில நாட்களாக தொடர்ந்து இப்பகுதியை நோக்கி இரவு வேளைகளில் எறிகணைகள் ஏவப்படுவது குறிப்பிடத்தக்கது. (11). (09)

## 6 மாதத்துக்கு ஒரு முறையே வைத்தியர் வருவார்

### தீவுப்பகுதி நிலை பற்றி பெண் தகவல்

(யாழ்ப்பாணம்)

''தீவுப் பகுதிகளில் மக்களை மந்தைகளாக அடைத்துவைத்திருக்கும் நிலையே உள்ளது. எமக்கும் வெளியிடங்களுக்குமான தொடர்புகள் இல்லை. எந்த ஒரு பத்திரிகையோ,

( 5 ஆம் பக்கம் பார்க்க )

## ரயிலுடன் பஸ் மோதியது 70 பேர் காயம்

வடபகுதிக்கான புகையிரதத்துடன் தனியார் பஸ் வண்டி ஒன்று மோதியதால் எழுபது பேர் காயமடைந்தனர்.

அனுராதபுரம் நாவிசா தூவ வீதியில் சென்றுகொண்டிருந்த தனியார் பஸ்வண்டியே சிராவஸ்திபுர புகையிரத நிலையத்திற்கு அண்மையில் புகையிரதத்துடன் மோதியது இப்பாதையிலிருந்த ரயில்வேக் கடவை மூடப்பட்டிருக்காமையினாலேயேஇச் சம்பவம்நடைபெற்றதாகக் கூறப்படுகிறது.

## கிளாலி கடற்பரப்பில் படகு எரிந்தது

(யாழ்ப்பாணம்)

ஆலங்கேணியிலிருந்து கிளாலி நோக்கி நேற்று முன்தினம் இரவு வந்துகொண்டிருந்த பயணிகள் படகு மீது கடற்படை விசைப்படகு தாக்கியதில் படகு தீப்பற்றி எரிந்ததாக ஊர்ஜிதம் அற்ற செய்திகள் தெரிவிக்கின்றன.

இப்படகில் ஐவர் பயணம் செய்ததாகவும் அவர்களில் ஒருவர் தப்பிவந்துவிட்டதாகவும் மற்றைய நால்வரின் நிலைகுறித்து தெரியவில்லை எனவும் அச்செய்தியில் கூறப்

( 5 ஆம் பக்கம் பார்க்க )

## கல்குடாவில் சுற்றிவளைப்பு பலர்கைது; வண்டிபறிமுதல்

(கொழும்பு)

கல்குடாப் பகுதியை திடீரெனச் சுற்றிவளைத்த பொலிசார் பலரைக் கைது செய்துள்ளனர் சட்டவிரோதமான முறையில் முருகைக் கற்களை அகழ்ந்ததாக இவர்கள்மீது குற்றம் சுமத்தப்பட்டிருப்பதுடன் இவர்களது மாட்டுவண்டிகள், உழவு இயந்திரங்கள் என்பனவும் பொலிசாரால் கைப்பற்றப்பட்டுள்ளது. அத்துடன் பல சுண்ணாம்புச் சூளைகள் மற்றும் பொதி செய்யப்பட்ட சுண்ணாம்பு மூடைகளும் கண்டு பிடிக்கப்பட்டதாகவும் பொலிசார் கூறியுள்ளனர்.

## கட்டுப்பாட்டு விலையில் பொருள்கள்

(யாழ்ப்பாணம்)

வேலணை ப.நோ.கூ. சங்கம் தனது எல்லைக்குட்பட்ட ''உ'' அட்டை வைத்திருப்பவர்களிற்கு ஒரு வாரத்திற்கு ஒருமுறைகட்டுப்பாட்டு விலைகளிற்கு 5 கிலோ மா, 5 கிலோ அரிசி [சோறா] 2 கிலோ சீனி அதன் மக்கள் கடை மூலம் வழங்கி வருகிறது அந்தந்த வாரத்திற்குரிய பொருள்களை அந்தந்த வாரத்தில் திங்கள் முதல் சனிக்கிழமை வரை பெற்றுக் கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது. [88]

## ஆலங்கேணி பகுதியில் பெருமளவு மக்கள் தரிப்பு

[கிளிநொச்சி]

யாழ். குடாநாட்டிற்கான படகுசேவை சீரின்மையால் பல ஆயிரக்கணக்கான மக்கள் அடிப்படை வசதிகள் இன்றி கடந்த ஒருமாதமாக ஆலங்கேணிப் பகுதியிலும் மற்றும் கோவில்களிலும் தங்கியுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த மாதம் 2 ஆம் திகதி ஆலங்கேணி, கிளாலி கடற்பரப்பில் பொதுமக்களின் படகு மீது சிறிலங்கா கடற்படையினர் நடாத்திய கோரத் தாக்குதல்களைத் தொடர்ந்து இப்படகு சேவைகள் சீரற்றுக் காணப்படுவது தெரிந்ததே.

இதனால் வெளிமாவட்டங்

( 5 ஆம் பக்கம் பார்க்க )

## இரு தேசத்துரோகிகளுக்கு பகிரங்க மரணதண்டனை

புதுக்குடியிருப்பு சந்தியில் வைத்து நேற்று முன்தினம் தேசத்துரோகிகள் இருவருக்கு தமிழீழ விடுதலைப் புலிகளால் மரணதண்டனை வழங்கப்பட்டது.

இயக்க ஆதரவாளர்கள், உதவியாளர்கள் போன்றவர்களை இராணுவப் பிரதேசத்திற்குள் வைத்துக் காட்டிக் கொடுத்தமை, இயக்கமுகாம்களைக் காட்டிக்கொடுத்தமை, முக்கிய தளபதிகளைக் கொல்ல திட்டமிட்டுச் செயற்பட்டமை, குண்டுகள் வெடிக்கவைக்கும் பொறுப்புக்களை ஏற்றுக் கொண்டமை முதலான குற்றங்களுக்காக கணபதிப்பிள்ளை நடராசா (வயது 38, 7 ஆம் வட்டாரம் புதுக்குடியிருப்பு), கதிரவேல் சுந்தரராசா (வயது 40 4 ஆம் வட்டாரம் புதுக்குடியிருப்பு) ஆகிய இருவருக்கும் பகிரங்க மரணதண்டனை வழங்கப்பட்டது.

இவர்களுக்கு மரணதண்டனை நிறைவேற்றப்படுவதற்கு முன்னதாக புதுக்குடியிருப்பு, தண்ணீரூற்று போன்ற இடங்களிற்கு மக்களின் பார்வைக்காக இவர்கள் அழைத்துச் செல்லப்பட்டிருந்தார்கள்.

உளவாளிகள்!!!

அவதானமாக இருக்கவும்..

காரணமின்றிக் காத்திருப்பவர்
காட்டிக்கொடுப்பவராய் இருக்கலாம்.

## வரி விளம்பரம்

### அழகிய சாயிபாபா ஸ்ரிக்கர் இனாம்

எம்மிடம் றேடியோ, மணிக்கூடு திருத்தும் வாடிக்கையாளர்கட்கு மூன்று(3) அழகிய சாயிபாபா ஸ்ரிக்கர் இனாமாக வழங்கப்படும். டிக்காவாச் அன்ட் றேடியோ வேக்ஸ் 284, ஸ்ரான்லி வீதி, (வானவில் கூல்பார் அருகாமை) யாழ்ப்பாணம். கிளை; இலங்கை வங்கி அருகாமை, சாவகச்சேரி. (எலெக்ரோனிக் ஓட்டோமற்றிக் கடிகாரங்கள் திருத்துவதில் கைதேர்ந்தவர்கள்.) (சி-5918)

### கலண்டர்கள் விற்பனைக்குண்டு

விற்றுமுடிக்கும் நோக்குடன் திருவள்ளுவர் நாட்காட்டி மற்றும் 3 அளவுகளில் படக் கலண்டர்கள் மலிவுவிலையில் பெற்றுக்கொள்ளலாம். 48 மணிநேரத்தில் தங்கள் விலாசம் பதிப்பித்துக் கொடுக்கப்படும். ஸ்ரீ காந்தா அச்சகம்-புத்தகசாலை, 330, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (4173)


# யுத்தமுனையிலுள்ள படையினருக்கு சிறப்பு முன்னுரிமைகள் வேண்டும்

**- ரணில் விக்கிரமசிங்க**

(கொழும்பு)

வடக்கு - கிழக்குப்பகுதியில் யுத்த முனையில் நிற்கும் சிறிலங்காப்படையினருக்கும் ஏனையோருக்கும் சிறப்பு முன்னுரிமைகள் வழங்கப்பட வேண்டும் என சிறிலங்கா கைத்தொழில் விஞ்ஞான தொழில் நுட்ப அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

சிறிலங்காப் பாராளுமன்றத்தில் இவ்வாறு தெரிவித்த அமைச்சர் ஒய்வில் தென்பகுதி திரும்பும் படையினருக்கு காங்கேசன்துறை, அனுராதபுரம் பகுதிகளில் இடையில் தங்குமிட வசதிகள் செய்து கொடுக்கப்படல் வேண்டும். தீர்வையற்ற சிகரட் வழங்குவது மீண்டும் செயற்படுத்துதல், அதிகளவு சீருடைகளை படைகளுக்கு வழங்குதல், இலவச பேருந்து பயண சேவை, போர்முனைகளில் படையினர் தங்குமிடங்களில் கூரைகள் திருத்தி அமைக்கப்படல், முன்னணி நிலைகளில் நிற்கும் படையினருக்கு காலம் தாழ்த்தாது உணவுப் பொருள்கள் அனுப்புதல், ஊர்காவல் படையினரின் ஊதியங்களை தாமதமின்றி வழங்கல், காவல்துறை துணைப்படையினருக்கும், காவல் அணியினருக்கும் தரமான ஆயுதங்களை வழங்குதல், முன்னணிப் போர்முனைகளில் செல்வோருக்கு நான்கு சக்கர உழவு இயந்திரங்கள், மிதிவண்டிகள் உட்பட உரிய வாகனங்களை அதிக எண்ணிக்கையில் வழங்குதல் படையினரின் போக்குவரத்திற்கு இலகுவாக மேலதிக உலங்கு வானூர்திகள் கப்பல்கள். விமானங்கள் என்பனவற்றை சேவையில் ஈடுபடுத்துதல் போன்ற வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் வேண்டும் எனக் குறிப்பிட்டார்.

படையினரின் குறைபாடுகளை நீக்கி மேலதிக சௌகரியங்களை வழங்கக் கூடிய இவ் ஆலோசனைகளை ஜனாதிபதியின் கவனத்திற்கு உடன் கொண்டு வந்து ஆவன செய்வதாக பிரதமர் டி.பி, விஜயதுங்க கூறியுள்ளார்.

## தற்கொலை

(பருத்தித்துறை)

வயோதிப மாது ஒருவர் அயல் வீட்டுக் கிணற்றுக்குள் பாய்ந்து தற்கொலை செய்து கொண்டார். புலோலி தெற்கு வடுவாவத்தையைச் சேர்ந்த திருமதி இராமலிங்கம் சின்னம்மா (வயது 85) என்பவரே கிணற்றுள் பாய்ந்து தற்கொலை செய்து கொண்டவராவார்.

## அலுவலகங்கள் தனித்தனியாக செயற்படுகின்றன

(பருத்தித்துறை)

இதுவரை காலமும் ஒன்றாக இயங்கி வந்த பருத்தித்துறை பிரதேச சபை தலைமைச் செயலகமும், பருத்தித்துறை பிரதேச சபையின் புலோலி உப அலுவலகமும் தனித்தனியே செயற்படத் தொடங்கியுள்ளன.

## பண்டித வகுப்புக்கள் சனியன்று ஆரம்பம்

கல்வி மேம்பாட்டுப் பேரவையின் ஆதரவுடன், ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம் யாழ்ப்பாணத்திலுள்ள கல்விக் கோட்டங்களில், பிரவேச, பாலபண்டித, பண்டித வகுப்புக்களைத் தொடங்கவிருக்கின்றது. இதற்கு முன்னோடி முயற்சியாக மானிப்பாய் இந்துக் கல்லூரியில் பண்டத்தரிப்புக் கல்விக் கோட்டத்தின் சார்பாக எதிர்வரும் சனிக்கிழமை காலை எட்டு மணி முதல் வகுப்புக்கள் தொடங்கப்படவிருக்கின்றது.

ஏனைய கல்விக்கோட்டங்களைச் சேர்ந்த கழக ஆசிரியர்களையும், கற்க விரும்பும் மாணவர்களையும் அவ்வக் கல்விக் கோட்டங்களுக்கான பிரதிக் கல்விப்பணிப்பாளர்களுடன் தொடர்பு கொள்ளுமாறு கல்விப் பணிப்பாளர் கேட்டுக்கொண்டுள்ளார்.

## பொருளாதார தடை விலக்க ஆயர் கோரிக்கை விடுத்தார்

**-பிரட்மன் வீரக்கோன் தகவல்**

(கொழும்பு)

வடபகுதிக்கு அனுப்பப்படும் பொருட்கள் மீதான தடை உத்தரவுகளை நீக்கி தேவையான அத்தியாவசியப் பொருட்களை அனுப்பி வைக்குமாறு யாழ்ப்பாணம் சென்று திரும்பிய ஆங்கிலத் திருச்சபையின் ஆயர் கென்னத் பெர்னான்டோ தம்மிடம் கேட்டுக் கொண்டதாக சிறிலங்கா ஜனாதிபதியின் சர்வதேச விவகாரங்களுக்கான ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் தெரிவித்தார்.

வாராந்தப்பத்திரிகையாளர் மாநாட்டில் கலந்துகொண்டு பேசிய அவர் மேலும் கூறுகையில் வடக்கில் அமுல்படுத்தப்பட்டு வரும் பொருளாதாரத் தடையின் காரணமாக பொது மக்கள் பெரிதும் பாதிப்பு அடைந்துள்ளதாகவும், ஆயர் தம்மிடம் சுட்டிக்காட்டியதாகவும், பொருட்களுக்கான தடையை நீக்குவது பற்றித் தாம் தீவிரமாக ஆராய்ந்து வருவதாகவும் தெரிவித்தார்.

## நூல் வெளியீடு

எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை கலாநிதி. சபா. ஜெயராஜா அவர்கள் மொழிபெயர்த்த "மனித விழுமியத்துக்கான சத்தியசாயி கல்வி" என்னும் நூல் வெளியீடும், இணுவில் ஸ்ரீ சத்ய சாயி பஜனை நிலைய 7வது ஆண்டு நிறைவு விழாவும், இணுவில் அண்ணா கட்டட 2ம் மாடியில் நடைபெறும்.

தலைமையுரையை திரு. செ. சிவஞானம் அவர்களும், அறிமுக உரைகளை வட மாநில கல்விப்பணிப்பாளர் திரு. இ சுந்தரலிங்கம், திரு. எஸ். விஜயரத்தினம், திருமதி. ரவீந்திரன் அவர்களும். பதிப்புரையை திரு. அ. வை. நாகராஜனும், வெளியீட்டுரையை பேராசிரியர் நந்தி அவர்களும் நிகழ்த்துவர்.


திருமண விழாக் கண்ட மணமக்களுக்கு

# திருமண வாழ்த்து

| மணமகன் | மணமகள் |
| --- | --- |
| தவில்மேதை, லயஞான குபேரபூபதி | அளவையூர் |
| திரு. தெட்சணாமூர்த்தியின் புதல்வன் | திரு. குமாரசாமியின் புதல்வி |
| **செல்வன் உதயசங்கர்** | **செல்வி றஞ்சனா** |

வெட்டுங்கயல் விழி றஞ்சனா தன்னுடன் காதல்மழை
கொட்டும் தவிலிசை மேதை உதயசங் கர்த்திறலான்
எட்டுத் திசையுமே ஏத்திட இன்மணந்தான் புரிந்தான்
சிட்டும் பெடையுமாய்ச் சிந்தை இணைந்தே சிறக்கட்டுமே

கூறும் அறநெறி யிற்புவி மீதுநீர் காதலுடன்
வீறு பெருகிட இல்லறமாற்றுக இன்பச்சுவைச்
சாறு அருந்துக, தேடரும் செல்வமாம் பேறுபதி
னாறும் பொருந்துக, கங்கை சுமந்தானருளுவனே.

கலைமகள் ஒலியமைப்பாளர்,
நாவலர் மடம், கரவெட்டி
அல்வாய். [3415]

வாழ்த்தும்
க. புலேந்திரன்



# நினைவு கூருகின்றோம்...

## 1993-2-4

1957 ஆம் ஆண்டு இந்த தினத்தில் சிறிலங்கா சுதந்திர தினத்தைப் பகிஷ்கரித்துத் தமிழீழமெங்கும் துக்கநாளாக அனுட்டிக்கப்பட்ட போது, திருக்கோணமலைச் சந்தைக் கட்டிடத்தில் கறுப்புக்கொடி ஏற்றி வைக்கையில் சிங்கள இனவெறியர்கள் மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டில் உயிரீந்த-

'மான வீரன்-திருமலைத் தியாகி'

நடராசன் (திருக்கோணமலை)

1985 ஆம் ஆண்டு வீரச்சாவெய்திய

★ கந்தசாமி துரைநாயகம் (எல்.பி.03, மூதூர் -திருமலை)

1986 ஆம் ஆண்டு அம்பாறை-அக்கரைப்பற்றுப் பகுதியிற் சிறிலங்கா அதிரடிப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது சயனைற் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

பரிசுத்தம் (கணபதிப்பிள்ளை ஆத்மராஜா-கல்முனை-03 அம்பாறை)

1988 ஆம் ஆண்டு திருமலை - மூதூர்ப் பகுதியிற் சிறிலங்கா இராணுவத்தினர் மற்றும ஊர்காவற்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில வீரச்சாவெய்திய-

★ வரதன் (சினித்தம்பி வரதராசன்-பாலத்தோப்பூர், மூதூர் திருமலை)

கிளிநொச்சியிற் தேசவிரோதக் குழுவினராற் கடத்திச் செல்லப்பட்டுக் கொலை செய்யப்பட்ட-

★ ஜேம்சன் (எஸ். மாசிலாமணி-முரசுமோட்டை, பரந்தன்-கிளிநொச்சி)

★ சுதர்சன் (சுபரூபன்-கிளிநொச்சி)

★ விக்ரர் (வீ. தவநாயகம்-கிளிநொச்சி)

மட்டக்களப்பில் இந்தியப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 4 தமிழர்கள்.

1989 ஆம் ஆண்டு இந்தியப்படையினர் மற்றும் தேசவிரோதக் குழுவினரால் சுட்டுக் கொல்லப்பட்ட

நாட்டுப்பற்றாளரான-

சின்னத்தம்பி நவீந்திரன் - ராகவன் (செம்பியன்பற்று, வடமராட்சி கிழக்கு-யாழ்)

மற்றும் ஒரு தமிழ்ப்பொதுமகன்

யாழ் - புன்னாலைக்கட்டுவன். ஈவினைப்பகுதியில் இந்தியப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட தமிழ் இளைஞன்

1992 ஆம் ஆண்டு மட்டு-மகிழவெட்டுவான் பகுதியிற் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய

அருள்ராஜ் (கெக்டர் வில்பிரட் பெயிலதிஸ்-எல்டப் ஹூப், பசறை)

மட்டு-தும்பன்கேணிப் பகுதியில், வயலிற்குச்சென்று கொண்டிருக்கையில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய 2 தமிழ் விவசாயிகள்

கிளிநொச்சி-உருத்திரபுரம், கூழாவடிப் பாலத்தடியில் சிறிலங்காப்படையினர் மேற்கொண்ட விமானக்குண்டு வீச்சிற் கொல்லப்பட்ட இளைஞர்கள் சிறுவர்கள் உட்பட அதே மாவட்டத்தைச் சேர்ந்த 10 தமிழர்கள், மற்றும் யாழ்-மல்லாகம், ஆலை வீதியைச் சேர்ந்த தமிழ் விவசாயி

ஆகியோரை இந்நாளில்

நினைவு கூருகின்றோம்

★ இக்குறிப்பிடப்பட்டுள்ள மாவீரர்கள் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவர்களாவர்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி-5932)

# பொருளாதாரம் விருத்திபெற கல்வித்திட்டத்தில் மாற்றம் தேவை

## — துணைவேந்தர் துரைராஜா

(யாழ்ப்பாணம்)

மாணவர்கள் பாடசாலைக் கல்வியை முடித்ததும் சுய தொழில் மூலம் தமது பொருளாதாரத்தை உயர்த்தக்கூடிய வகையில் எமது கல்வித்திட்டம் மாற்றியமைக்கப்படல் வேண்டும் என யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் திரு அ. துரைராஜா தெரிவித்தார்.

அண்மையில் இலங்கைச் செஞ்சிலுவைச்சங்க யாழ். கிளைப் பணிமனையில் புதிய கற்கை நெறிகளை ஆரம்பிப்பது தொடர்பாக நடைபெற்ற விழாவில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தொடர்ந்து உரையாற்றுகையில் இலங்கை பூராவும் உள்ள பத்தாயிரம் பள்ளிக் கூடங்களில் சுமார் 4 5 இலட்சம் மாணவர்கள் உயர் கல்வி கற்கின்றனர். இவர்களில் 1.5 வீதமான மாணவர்கள் மட்டுமே உயர் கல்வி கற்பதற்காக இலங்கைப் பல்கலைக்கழகங்களிற்குத் தெரிவாகின்றனர். ஏனைய 98.5 வீதமானவர்களும் எதுவித கல்வியுமின்றி இருக்கவேண்டிய நிலை உருவாகிறது. இந்நிலையைமாற்றி நம் பொருளாதாரத்தினை வளர்க்கவும், சுய தொழிலை பெற்றுக்கொள்ளக்கூடிய வகையிலும் எமது கல்வித்திட்டம் மாற்றி அமைக்கப்பட வேண்டும்.

உலகில் வாழும் மக்களில் 20 வீதமானோர் மிகவும்பட்டினியுடன் வாழ்கின்றனர் இவர்கள் அனைவரும் மூன்றாம் உலக நாடுகளில் வாழ்பவர்களே. இவர்களுக்கு சுகாதார வசதி, வீட்டு வசதிகள் மிகக் குறைவாகவேயுள்ளது நாளாந்தம் 35,000 மக்கள் பட்டினியால் இறக்கிறார்கள். இவர்களுக்கு ஏற்ற தொழில் வளங்களை உருவாக்கக்கூடிய கல்வியை வழங்கி இவர்களை சொந்தக் காலில் நிற்க நாம் உதவ வேண்டும்.

இலங்கையில் அரசதிட்டங்கள் செயற்படாது இருப்பதற்கு காரணம் மக்களைக் கலந்தாலோசியாது திட்டங்களைத்தீட்டுவதே ஆனால் அரசு, மக்களுக்காக உழைக்கும்- மக்களுடன் ஒன்றாக இணைந்துள்ள அரசசார்பற்ற நிறுவனங்களுடன் இணைந்து திட்டங்களை வகுத்தால் அவை வெற்றியளிக்கும்.

நிவாரணத்தை வழங்குவதன் மூலம் சோம்பேறியான சமுதாயத்தை விட்டொழித்து இத்தகைய பயிற்சி நெறிகள் மூலம் சுயதொழில் வாய்ப்பை வளர்த்து சமுதாயத்தை முன்னேற்றுவது அவசியம் என்றார்.

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ் கிளைத் தலைவர் டாக்டர் சிங்கராசா தலைமையில் நடைபெற்ற மேற்படி விழாவில் சர்வதேச செஞ்சிலுவைச்சங்கபிரதிநிதிசெல்வி பூசி, யாழ். செயலக மேலதிக அரச அதிபர் திருமதி சிவநாயகம் போல் யாழ் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. வேலாயுதம் ஆகியோர் கலந்துகொண்டனர் (17)

---

## தண்டவாளம் அபகரிப்பு

(கொழும்பு)

வாழைச்சேனை பகுதியிலிருந்து ஒரு பகுதி ரயில் தண்டவாளங்களும், சிலிப்பர் கட்டைகளும் இனந்தெரியாதோரால் அபகரிக்கப்பட்டிருப்பதாகக் கொழும்பிற்கு கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. இதனால் கொழும்பு, வாழைச்சேனை ரயில் சேவை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாம். வாழைச்சேனை காகித ஆலைக்குப் பின் புறமாக இருநூறு அடி தூரம் வரையிலான பாதை இவ் விதம் சேதமாக்கப்பட்டுள்ளது.

## கருத்தரங்கு

குரும்பசிட்டி சன்மார்க்க சபையினர் நடாத்தும் மாதாந்தகருத்தரங்கத்தொடரின் இரண்டாவது அமர்வு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 8 45 மணியளவில் இராமநாதன் நுண்கலைக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்ச்சியின் போது இந்திய மரபில் ஓவியக்கலை என்னும் பொருள்பற்றி கலாகேசரி ஆ. தம்பித்துரை அவர்களும் இந்திய மரபில் சிற்பக்கட்டடக்கலை பற்றி விரிவுரையாளர் செ கிருஷ்ணராசா அவர்களும் கருத்துரை வழங்கவுள்ளனர்.

## அறுவடை செய்யவும் இராணுவம் கெடுபிடி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் நெல் அறுவடைக் காலம் தொடங்கியுள்ள போதிலும் அறுவடைக்கு அனுமதி பெற வேண்டும் என இராணுவத்தினர் உத்தரவிட்டுள்ளனர்.

வயல்களில் நெல் அறுவடை செய்ய வேண்டுமாயின் வயல் சொந்தக்காரரின் அனுமதிக் கடிதம், உழவு இயந்திர இலக்கம், உழவு இயந்திர சொந்தக்காரரின் பெயர், சூடடிக்கும் உழவு இயந்திரத்தின் இலக்கம், இயந்திர சொந்தக்காரரின் பெயர், அடையாள அட்டை இலக்கம், விதானையாரின் சிபாரிசுக் கடிதம், கமநல சேவைகள் உத்தியோகத்தரின் அனுமதிக் கடிதம் ஆகியவற்றுடன் வயல் அமைந்துள்ள பிரதேசத்திற்கு அண்மையில் உள்ள இராணுவப் பொறுப்பதிகாரிக்கு விண்ணப்பித்து அனுமதி பெறவேண்டும் என்றும், அவ்வாறு அனுமதி பெறாது அறுவடை செய்தால் அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## புதிய வரி விகிதம் அறிவிப்பு

(கொழும்பு)

வருமான வரிச் சட்டத்தின் கீழ் சிறிலங்கா அரசினால் புதிய வரி விகிதங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. நேற்று முன்தினம் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்ட இவ் வரி விகிதங்கள் 1986ஆம் ஆண்டிற்கு பின்னர் வரவு செலவுத் திட்டத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ள சகல திருத்தங்களையும் உள்ளடக்கியுள்ளது இந்த வரி விகிதங்களில் மாற்றங்களும் கொண்டு வரப்பட்டுள்ளன.

## திருவிழா

மட்டுவில் புனித லூர்து மாதா தேவாலயத் திருவிழா நேற்று மாலை ஐந்து மணிக்கு செபமாலை ஓதுதலுடன் ஆரம்பமாகியது அதனைத் தொடர்ந்து திருப்பலியும், நற்கருணை ஆராதனையும் நடைபெறவுள்ளது. இன்று காலை ஏழு மணிக்கு திருநாள் திருப்பலியும், திருச் சொரூப பவனியும் நடைபெறுமென ஆலய நிர்வாக சபை கூறியுள்ளது.

சோதனை நிலையங்களில் பணியாற்றும்

## இராணுவத்தினர் மீது புலனாய்வு பிரிவு நோட்டம்

(வவுனியா)

இராணுவ சோதனை நிலையங்களில் சோதனை செய்வதற்கென சேவைக்கு விடப்பட்டுள்ள இராணுவம் மற்றும் பொலிஸார் மீது சிறிலங்கா புலனாய்வுப் பிரிவினரின் பார்வை விழுந்துள்ளது என்று அறியப்படுகிறது.

பொருள்கள், மற்றும் வாகனங்களைச் சோதனை செய்வோர், வட பகுதி தமிழர்களிடம் பணம் பெற்றுக் கொண்டு பெறுமதிவாய்ந்த தடைப் பொருள்களை அனுப்பி வைக்கின்றனராம்.

நீண்ட காலமாக சோதனைச் சாவடிகளில் இச் சம்பவங்கள் இடம்பெறுவதனால், புலனாய்வுப் பிரிவினர் இவ்வாறு குற்றச் செயல்களில ஈடுபடும் இராணுவம் மற்றும் பொலிசாரை கண்டுபிடிப்பதில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

வவுனியா ஈரற்பெரியகுளம், தாண்டிக்குளம் சோதனைச் சாவடிகளில் ஊடாக, தடை செய்யப்பட்டுள்ள பொருள்கள் பல வடபகுதி வந்து சேருகின்றன என்று இராணுவ உயர் பீடம் கவலை அடைந்துள்ளதாம். (தி)

## படையிலிருந்து தப்பி ஓடிய ஐம்பது பேர் கைது

(மாத்தறை)

இராணுவத்திலிருந்து விலகிச் சென்று தலைமறைவாகியுள்ள இராணுவத்தினரைக் கைது செய்யத் தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகப் பாதுகாப்பு உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதுவரை நடத்திய தேடுதலில் இராணுவத்திலிருந்து விலகிய ஐம்பது பேர் கைது செய்யப்பட்டிருப்பதாகவும், அவர்களிடம் இராணுவத்திற்குச் சொந்தமான ஆயுதங்கள் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுவதுடன் இதற்குப் பொலிசாரின் உதவிகளையும், பொது மக்களின் ஒத்துழைப்புகளையும் இராணுவத்தினர் கோரியுள்ளனர்.

ஒன்பது வருட காலத்திற்கு முன் தப்பிச்சென்ற இராணுவத்தினரும் இதில் அடங்குவதாகவும், நாட்டில் நடைபெறும் கொள்ளைச் சம்பவங்களில இவர்களுக்கும் தொடர்பு உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## வதிவிட வேளாண்மை பட்டறை

குரும்பசிட்டி சன்மார்க்க சபையும், கன்னாகம் லயன்ஸ் கழகமும் இணைந்து யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனத்தின் அனுசரணையுடன் நடாத்தும் வதிவிட வேளாண்மைப் பட்டறை நாளைமுதல் ஆரம்பமாகவுள்ளது. மூன்று நாட்கள் நீடிக்கும் இப் பட்டறை நிகழ்ச்சி மருதனார் மடத்தில் இருக்கும் யாழ்ப்பாணக் கல்லூரியின் விவசாய நிறுவனத்தில் நடைபெற உள்ளது.

## பத்திரிகையாளர்கள் மீது ரகசியபொலிஸ் விசாரணை?

(கொழும்பு)

கொழும்பு விகார மாதேவி பூங்காவில் அண்மையில் நடைபெற்ற வைபவத்தை ஒழுங்கு செய்த ஜனதா சாகித்திய அமைப்பாளரும், பிரபல பத்திரிகையாளர்களும் இரகசியப் பொலிசாரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என லக்திவ பத்திரிகையின் ஆசிரியர் வினி எதிரிகொட கூறியுள்ளார்.

இச் சாகித்திய வைபவமும் நுகேகொட பத்திரிகையாளர் கூட்டமும்ஜே.வி.பி.யினருடன் தொடர்புடையதாகக் கூறும் செய்தியினை சிலுமின பத்திரிகை வெளியிட்டது தெரிந்ததே.

மேற்படி இரு நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டவர்கள் யார்? யார்? இவ் வைபவத்தை ஒழுங்கு செய்தவர்கள் யார்? யார்? இதற்காக செலவிடப்பட்ட பணம் எங்கிருந்து பெறப்பட்டது? இதற்கென வெளிநாட்டு நிதியுதவி எதுவும் கிடைத்ததா? பரிசுக்குரியவர்கள் எந்த அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டனர்? இதற்காக திரை மறைவில் செயற்பட்டோர் யார்? என்பன போன்ற வினாக்கள் விசாரணையின் போது கேட்கப்பட்டதாகவும், பின்னர் இவர்கள் மிரட்டப்பட்டு விடுதலை செய்யப்பட்டதாகவும் கூறப்படுகின்றது.

## வாந்திபேதி நோய் கிளிநொச்சியில் தீவிரம்

(வவுனியா)

கிளிநொச்சிப் பகுதியில் வாந்திபேதி நோய் தீவிரமாகப் பரவி வருவதாகத் தகவல் கிடைத்துள்ளது.

சமீப நாட்களாக வாந்திபேதி நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் வைத்தியசாலைகளில் சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்று அறியப்படுகிறது

கிளிநொச்சி இராமநாதபுரம் பிரதேச வைத்தியசாலையில் இந்நோய் காரணமாக பலர் சிகிச்சை பெற்று வருகின்றனர். அப்பகுதியில பலர் மரணமடைய நேர்ந்துள்ளது என்றும் அறிய வருகிறது. (தி)

## தபால் திணைக்கள ஊழியர் இராணுவத்தினரால் கைது

(வவுனியா)

வவுனியா நகரம் சென்று தபால் பையுடன் வந்து கொண்டிருந்த தபால் சேவகர் இராணுவ உளவாளிகளினால் கைது செய்யப்பட்டார்

செல்லர் சிவஞானம் என்ற குடும்பஸ்தர் சாஸ்திரி கூழாங்குளம் பகுதியைச் சேர்ந்தவர் இவர் வழமைபோல வவுனியா நகரில் உள்ள பிரதம தபாலகம் சென்று தபால் பையுடன் வந்துகொண்டிருந்த போது கைது செய்யப்பட்டார்.

கடந்த 29ஆம் திகதி இவர் கைதானார் தற்போதைய இவரது நிலைபற்றி அறிய முடியவில்லை.

சமீப நாட்களாக வவுனியாவில் சிறிலங்கா இராணுவத்தால் பலர் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (தி)

## பல்கலைக்கழகம் இயங்குவதில் அரசாங்கம் அக்கறையீனம்

-பி. பி. சி. தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு. கிழக்கு பிரச்சினையும், தெற்கில் ஜே வி. பியின் பிரச்சினையும், பல்கலைக்கழக விவகாரங்களால் ஆரம்பமானவையே என பி. பி. சி. அண்மையில் தெரிவித்துள்ளது.

பல்கலைக்கழக அனுமதியில் காட்டப்பட்ட வேறுபாடுகளே இந்த நிலைக்குக் காரணமாகும் எனவும் தெரிவித்த பி பி ஸி. மேலும் கூறுகையில், இதனாலேயே அரசாங்கம் பல்கலைக்கழகத்தை இயங்க வைப்பதில் விருப்பமின்றி இருக்கின்றது எனவும் தெரிவித்தது.

மேலும் பல்கலைக்கழகங்களை திறப்பது குறித்து அரசாங்கம் அக்கறையீனமாக இருப்பதாகவும், பேராசிரியர் நளின் டீ சில்வாவை பதவி விலக்கியது என்றும் பி பி. சி. குறிப்பிட்டது.

கொழும்பு சட்டக்கல்லூரியில் இருக்கும் புத்தகங்களில் தொண்ணூறு வீதமானவை ஆங்கில மொழியிலேயே இருப்பதாகவும், செல்வந்தர்களின் பிள்ளைகளே ஆங்கிலத்தில் தேர்ச்சிபெற்று அவற்றை பயன்படுத்தக் கூடியதாக இருப்பதாகவும் குறிப்பிட்டுக் கூறியது.

அரசியல்வாதியின்

## மெய்ப்பாதுகாவலரைத்தேடி பொலிசார் வேட்டை

(கொழும்பு)

கொழும்பு மாவட்ட எம். பி. யும், ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவருமான ஹுசன்சமரசிங்காவின் வீட்டின் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகம் மற்றும் குண்டுவீச்சுத்தாக்குதல் தொடர்பாக அரசியல்வாதி ஒருவரின் மெய்ப்பாதுகாவலர் தேடப்படுகிறார்.

கொழும்பு டிக்சன் வீதியில் உள்ள வீடொன்றில் இருந்து கைப்பற்றப்பட்ட குண்டுதயாரிக்கும் மூலப்பொருட்கள்சுமார் 100 குண்டுகளைத் தயாரிக்க போதுமானதென பொலிசார் தெரிவித்துள்ளனர். மேலும் அவ்வீட்டில் இருந்து கைப்பற்றப்பட்ட பாதுகாப்புப்படையினர் மாத்திரம் பயன்படுத்தும் துப்பாக்கித்தோட்டாக்கள் எவ்வாறு அங்கு வந்தன என்பது குறித்து தனியான பொலிஸ் குழுவொன்று விசாரணைக்கென நியமிக்கப்பட்டுள்ளது. மூன்று மாதத்திற்கு முன்னர் கோட்டை புகையிரதநிலையத்திற்கு முன்னால் அரசியல் வாதிகளையும் மற்றும் பத்திரிகையாளர்களையும் தாக்கிய கோஷ்டியே ஹுசன் சமரசிங்க எம். பி வீட்டுச் சம்பவத்திலும் சம்பந்தப்பட்டிருக்கலாம் எனபொலிஸ்அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

---

## திருமலைக்கு மேலும் 300 ஆசிரியர்கள்

(திருமலை)

திருமலை மாவட்டத்திற்கு மேலும் 300 ஆசிரியர்களை நியமிக்குமாறு சிறிலங்கா ஜனாதிபதி ஆணைபிறப்பித்துள்ளார்.

மேற்படி தகவலை கல்விச் சேவை ஆணைக்குழுத் தலைவர் ஜோர்ஜ் மெண்டிஸ் தெரிவித்துளளார்.

நாடுகடத்தப்பட்ட பாலஸ்தீனியரை

# திரும்ப அழைத்துக்கொள்ள இஸ்ரேல் அரசு இணக்கம்?

(டெல்அவிவ்)

நாடுகடத்தப்பட்ட நானூற்றுக்கும் மேலான பாலஸ்தீனியர்களில் சுமார் நானூறு பேரைமட்டும் நாடு திருப்பத் தமது அரசு அனுமதிப்பதாக இஸ்ரேலிய பிரதமர் யிட்சாக் ரபீன் கூறியுள்ளார். நேற்று முன்தினமிரவு ஜெருசலேமில் அமைச்சரவையின் அவசரகூட்டத்திற்குப் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர் மேலும் கூறுகையில், மிகுதிப் பாலஸ்தீனியர்களின் நாடுகடத்தல் காலத்தை அரைவாசியாகக் குறைப்பதாகவும், அதுவரையில் பாலஸ்தீனியர்கள் தங்கியிருக்கும் முகாம்களுக்கு தேவையான உணவு மற்றும் மருந்து வகைகளை இஸ்ரேலில் இருந்து ஹெலிகப்டர்கள் மூலமாக அனுப்பி வைக்க இருப்பதாகவும் குறிப்பிட்டார்.

ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையில் இந்த விவகாரம் விவாதத்திற்கு வரு முன்பாக பதற்றத்தை தணியச் செய்யும் முயற்சியிலும் அமெரிக்காவின் ஆதரவைப் பெறும் வகையிலுமே இஸ்ரேல் இந்த நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பதாக அவதானிகள் கருதுகின்றனர்.

ஆந்திரமாநில கடத்தல்சம்பவத்தின்எதிரொலி

# மாநில அரசுமீது கண்டனம் இரு காங்கிரஸ் எம்.பிக்கள் ராஜினாமா

(டில்லி)

கடத்தப்பட்ட சட்டமன்ற உறுப்பினரையும், மற்ற அரச அதிகாரிகளையும்விடுவிப்பதில் மாநில அரசு செயலற்றுப் போயிருப்பதாகக் கூறி அதற்கு கண்டனம் தெரிவிக்கும் வகையில் ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த காங்கிரஸ் எம்.பிக்கள் இருவர் தமது பதவிகளை ராஜினாமாச் செய்துள்ளனர்.

திரு துரோணமராஜ சத்ய நாராயணா என்னும் மக்களவைஉறுப்பினரும், கோணதாலா ராமகிருஷ்ணா என்னும் மக்களவை உறுப்பினரும் தமது பதவி விலகல் கடிதங்களை கட்சித் தலைவரான பிரதமர் பி. வி. நரசிம்மராவிற்கு அனுப்பிவைத்துள்ளனர்.

இதனிடையே ஆந்திரப் பிரதேசத்தில் கடத்தப்பட்ட சட்டமன்ற உறுப்பினர் ஒருவரையும் ஏனைய அரச அதிகாரிகளையும் விடுவிக்கும் முயற்சியாக கடத்தல்காரர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக சி. அர்ஜுன்ராவ்என்னும் மூத்த ஐ. ஏ. எஸ். அதிகாரி ஒருவர்நியமிக்கப்பட்டுள்ளார். இவர் ஆந்திர மாநிலத்தின் நர்சிப் பட்டணம் என்னும் நகருக்கு விரைந்து சென்று பேச்சுக்களைத் தொடங்கவுள்ளார்.

கடத்தப்பட்டவர்களை விடுதலை செய்தால் கடத்தியவர்களுக்கு தீங்கு எதுவும் நேராது என்று மாநில அரசு மீண்டும் உறுதியளித்துள்ளது.

முதல்வர் ஜெயலலிதா மீது வழக்கு தொடர

# ஆளுநர் அனுமதி மறுப்பிற்கு எதிராக தி.மு.க. மனு தாக்கல்

(சென்னை)

தமிழக முதல்வர் ஜெயலலிதா உட்பட வேறு சிலருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்ய தமிழக மாநில ஆளுநர் பீஷ்ம நாராயண சிங் அனுமதி மறுத்திருப்பதை எதிர்த்து தி.மு.க தாக்கல் செய்துள்ள வழக்கை அதிக உறுப்பினர் கொண் பெஞ்ச் நீதிமன்றத்திடம் சென்னை உயர் நீதிமன்றம் பாரப்படுத்தியுள்ளது.

இவ் விடயம், அரசியல் சாசன சட்ட விதிகளுடன் சம்பந்தப்பட்டது என்பதால் அதிக உறுப்பினர் கொண்ட பெஞ்ச் நீதிமன்றமே விசாரிக்க வேண்டும் என்று சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி எம். பக்தவத்சலம் கூறியுள்ளார்.

லஞ்ச ஊழல் தடுப்பு சட்டத்தின் கீழ் தமிழக முதலமைச்சரையும், மற்றும் சிலரையும் விசாரிக்க அனுமதிகோரி திராவிட முன்னேற்றக்கழகப் பொதுச்செயலாளர் கே. அன்பழகன் இந்த மனுவைத் தாக்கல் செய்திருந்தது தெரிந்ததே.

# தமிழக சட்ட பேரவையில் இராசாராமிற்கு தனியிடம்

தமிழக சட்டப்பேரவையின் முன்னாள் சபாநாயகரும் முன்னாள் அமைச்சருமான க. இராசாராம் சட்டப்பேரவையில் கட்சி சாராத உறுப்பினராக கருதப்படுவார் என்று தமிழக சட்டப்பேரவை அலுவலகம் அறிவித்துள்ளது. சட்டப்பேரவையின் செய்திக் குறிப்பில் அவருக்கு தனியிடம் ஒதுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது

திரு. க. இராசாராம், அ.இ.அ.தி.மு.க சார்பில் தேர்தலில் போட்டியிட்டு பேரவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டவர் என்பதும் ஜெயலலிதா அமைச்சரவையில் இடம் பெற்றிருந்தவர் என்பதும் தெரிந்ததே.

டாக்டர் சுப்பிரமணிய சுவாமியின் நல்லாட்சி இயக்கத்தோடு தொடர்புபட்டிருந்தமைக்காக இராசாராம் அமைச்சர் பதவியிலிருந்தும் கட்சியிலிருந்தும் விலக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# ஆளுநர் பதவி விலக தி.மு.க. வும் கோரிக்கை

(சென்னை)

தமிழக ஆளுநர் பீஷ்மநாராயண்சிங் உடனடியாகப் பதவி விலக வேண்டும் அல்லது மத்திய அரசு பதவி விலக்க வேண்டும் என்று திராவிட முன்னேற்றக் கழகம் கோரியுள்ளது

சென்னையில் நேற்று நடைபெற்ற அக் கட்சியின் பொதுக்குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் ஒன்றில், ராஜீவ்காந்தி கொலை குறித்து விசாரணை செய்த வர்மாக் குழுவின் அறிக்கையின் அடிப்படையில் பீஷ்மநாராயண்சிங் பதவி விலக வேண்டும் என்று தி.மு.க. வலியுறுத்தியுள்ளது.

தொலைக்காட்சி அல்லது வானொலி மூலம் இந்திமொழி திணிக்கப்படுவதாகவும், இந்தப் போக்கை உடனடியாகக் கைவிட வேண்டும் என்றும் மற்றுமொரு தீர்மானம் கூறுகிறது.

தமிழ்நாட்டில்

# அரிசிவிலையுயர்வைஎதிர்த்து காங்கிரஸ் ஆர்ப்பாட்டம்

(சென்னை)

கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் முன்பு நேற்றுக்காலை மறியல்செய்ய முற்பட்டதற்காக இந்திரா காங்கிரஸ்நாடாளுமன்ற உறுப்பினர் சி. கே. குப்புச்சாமி கைது செய்யப்பட்டார். அவருடன் சுமார் 70 காங்கிரஸ் தொண்டர்களும் கைது செய்யப்பட்டனர்.

நியாய விலைக் கடைகளில் அரிசி விலை ஏற்றத்தைக் கண்டித்து அவர்கள் மறியல் செய்ய முயன்றதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. நேற்று மாலை அவர்கள் விடுதலை செய்யப்பட்டார்கள்.

# அரபாத்திற்கு கௌரவம்

வளைகுடாப் போரில் பாலஸ்தீனம் வகித்த பங்கை கௌரவிக்கும் முகமாக பாலஸ்தீன இயக்க தலைவர் யசீர் அரபாத்திற்கு ஈராக்கிய ஜனாதிபதி சதாம் ஹூசைன் விருது வழங்கி கௌரவித்துள்ளார். உறவுகளைமேம்படுத்தும்நோக்கோடு அரபாத் நேற்று முன்தினம்ஈராக்தலைநகரான பாக்தாத்திற்கு விஜயம் செய்துள்ளார்


## அறிவித்தல்

பின்வரும் புதிய தொழில் பயிற்சிகளுக்குரிய விண்ணப்பங்கள் வழமையான விண்ணப்பப்படிவங்களில் பூர்த்தி செய்யப்பட்டு எதிர்வரும் 15. 2 93 அன்றோ அல்லது, அதற்கு முன்போ அதிபர், தொழில் நுட்பக் கல்லூரி யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கவும்.

கல்வித் தகைமைகள்:- க. பொ. த. சாதாரண தரம் 6 பாடங்களில் சித்தி

1. நீர் குழாய் கற்கை நெறி (254) பகல் 1 வருடம்
2. மேசன் கற்கைநெறி (251) பகல் 1 வருடம்
3. மின்னியலாளர் கற்கைநெறி (360) பகல் 2 வருடம்
4. மரப்பொறி இயக்க வல்லுனர் கற்கைநெறி (273பகல்) 1 வருடம்

தொழில்நுட்பக் கல்லூரி, அதிபர்.
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
1993. 02. 02 [சி-5933]


# காபூல் மீது தாக்குதல்

(காபூல்)

ஆப்கான் தலைநகர் காபூல் மீது ராக்கட் தாக்குதல் நடத்தப்பட்டதில் எழுபத்திரெண்டு பேர் கொல்லப்பட்டதாக காபூல் வானொலி கூறியுள்ளது இத்தாக்குதலில் அரச கட்டடங்களும், வீடுகளும் சேதமடைந்துள்ளன. இந்திய தூதுவரக வளாகத்தினுள் ஒரு ராக்கட் வீழ்ந்து வெடித்தமையால் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார் இந்தத் தாக்குதல்களை ஹிஸ்பே இஸ்லாமி குழுவினர்கள் தான் நடத்தியிருப்பதாக கூறப்படுகிறது.

# கரையோர பாதுகாப்பிற்கு புதியதிட்டம்

(டில்லி)

இந்தியாவின் கரையோரப் பாதுகாப்பிற்கென புதிய திட்டம் வகுக்கப்பட்டிருப்பதாக தெரியவருகின்றது. இந்தியாவின் கடற்கரையோரங்களையும், மீனவர்களையும்பாதுகாப்பதனைமையமாகக்கொண்டு இந்தப் புதியதிட்டம் வகுக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது குறிப்பாக தமிழ்நாடு மாநிலத்தில் மட்டுமன்றி கடத்தல் நடவடிக்கைகள் இக்கரையோர மாநிலங்களிலும் இடம்பெறுவதாகவும் அதனை தடுக்கும் வகையில் இந்த திட்டம் வகுக்கப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகின்றது.


# G. A. Q - 94

பேராதனைப் பல்கலைக் கழகம்

[வெளிவாரிப் பட்டப்படிப்புக்கள்]

★ மேற்கூறப்பட்ட பட்டப்படிப்பிற்கான விண்ணப்பங்கள் பல்கலைக் கழகத்தினால் கோரப்பட்டுள்ளது.

இதற்கான பதிவுகளை எமது நிறுவனத்தில் செய்து கொள்ளலாம்.

★ கலை-வர்த்தக-விஞ்ஞான பாடநெறிகளில் A/L இல் 3 பாடங்களில் சித்தி பெற்றவர்களும், பயிற்றப்பட்ட ஆசிரியர்களும் விண்ணப்பிக்கலாம்.

★ முக்கிய குறிப்பு: A/L - 92 August பரீட்சை எடுத்து 3 பாடங்களில் சித்தியடைந்தவர்களும் விண்ணப்பிக்கலாம்.

விரிவுரைகள் ஆரம்பம்: 6-2-93
(காலை: 9 மணி)

விபரங்களையும், விண்ணப்பப் படிவத்தையும் நேரில் பெற்றுக்கொள்ளலாம்,
விபரங்களுக்கு;

எஸ். அருள் நங்கை

## புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி - யாழ்ப்பாணம்
(சி,5927)


## நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்



ஜனனம்: 5-5-1909

உதிர்வு: 6-1-1993

### அமரர் திருமதி சிவசம்பு கமலாட்சி

அச்சுவேலி தெற்கு

எமது குலவிளக்காகத் திகழ்ந்து சிவபதமடைந்த அன்புத் தெய்வம் திருமதி சிவசம்பு கமலாட்சி அவர்களின் இறுதிக்கிரியைகளில் கலந்தோர், அனுதாபங்கள் தெரிவித்தோர், உதவிகள் வழங்கிய அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன் இன்று வியாழக்கிழமை நடைபெறும் அந்தியேட்டி கிரியைகளிலும், நாளை இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரணம், மதியபோசனங்களிலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி.
1. 2. 1993

கணவன்:- சி. சிவசம்புவும்,
மகன்மார் பவானந்தம்,
ஆறுமுகானந்தனும் மற்றும்
பிள்ளைகளும், மருமக்கள்,
பேரப்பிள்ளைகளும.

(4208)

### சிந்தனைக்கு

இன்னல் தாக்கும்போது நம்பிக்கையுடன் இரு. இன்பத்தில் திளைக்கும் போதோ எச்சரிக்கையாய் இரு.

ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம் 04 - 02 - 1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2849 நிர்வாகபீடம் 2028
த. பெ. எண் - 05

# தமிழரின் பட்டினியுடன் விளையாட வேண்டாம்

யாழ். குடா நாட்டின் தரைவழிப் பாதைகளை துண்டித்துள்ள சிறிலங்கா அரசு உணவுப்பொருள்கள், அத்தியாவசியப் பொருள்கள் என்பனவற்றின் விநியோகத்தைக் கட்டுப்படுத்துவதன் மூலம், யாழ். குடாநாட்டை முற்றுகை நிலையில் வைத்து தமிழரைத் தோற்கடிக்கலாம் என எண்ணுகின்றது.

இன்று யாழ். குடாநாட்டில் அத்தியாவசியப் பொருள்களின் விலை என்றுமில்லாதவாறு உயர்ந்துள்ளது. ஒரு கிலோ அரிசி 55 ரூபாவைத் தாண்டி விட்டது. பொருளாதாரத் தடையுடன் இவ் உணவுப் பொருள் விநியோகத்தின் மீது விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடானது மக்களை என்றுமில்லாதவாறு பெருமளவில் பாதித்துள்ளது.

இவ்வாறு நடைபெறும் என்பது சிறிலங்கா அரசிற்குத் தெரியாததல்ல. யாழ். குடாநாட்டிற்கு மாதாந்தம் தேவையான 11,800 மெற். தொன் உணவுப் பொருள்களில் இன்று சேவையில் ஈடுபடும் இருகப்பல்களும் தாமதமின்றிச் செயற்பட்டாலும் 6000 மெற். தொன் உணவை மட்டுமே கொண்டு வர முடியும்.

கடந்த வருடத்தின் மத்தியில் யாழ். குடாநாட்டின் தரைவழிகள் யாவற்றையும் அரசாங்கம் துண்டித்தபோதே இவ்வாறானதொரு சதித்திட்டத்தின் அடிப்படையிலேயே செயற்பட்டது. இதற்கு ஏற்றாற் போலவே கடந்த வருடத்தின் இறுதியில் யாழ். குடா நாட்டிற்கான கப்பல் சேவையையும் அரசாங்கம் குறைக்க முற்பட்டது. மேலும், யாழ். குடாநாட்டிற்கான உணவு விநியோகத்திற்கான நிதியைத் திறைசேரி வழங்கவும் மறுத்தது.

அதாவது, யாழ். குடாநாட்டின் தரைவழிப் பாதைகள் துண்டிக்கப்பட்ட நிலையில் கப்பலில் ஒழுங்காக உணவுப் பொருள்கள் அனுப்பப்படாதவிடத்து பெரும் பஞ்சம் ஏற்படும் என்பது அரசாங்கத்திற்கு நன்கு தெரிந்திருந்தும் இவ்வாறு செய்தது. அதாவது உணவை ஓர் ஆயுதமாகப் பாவித்து தமிழரின் தேசியஇனப் போராட்டத்தை அடக்கிவிடலாம் அல்லது தமிழர் உரிமையைப் பேரம் பேசலாம் என்றே அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

ஆனால், சிறிலங்கா அரசாங்கம் மேற்கொள்ளும் உணவை ஆயுதமாகப் பிரயோகிக்கும் இந் நடவடிக்கை, மிகவும் கேவலமானதும், காட்டுமிராண்டித் தனமானதும் ஆகும். அத்தோடு அரசாங்கம் மேற்கொள்ளும் இந்நடவடிக்கையானது அரசு எதிர்பார்ப்பது போன்றல்லாது ஒரு பயங்கரமான நிலையையே உருவாக்கும்.

அதாவது இவ் உணவுப் பொருள்களின் தடையால் ஏற்படும் பஞ்சத்தினால் கிளர்ந்தெழும் மக்களின் நடவடிக்கை எல்லை மீறிச் சென்று விடவும் கூடும். உலகின் பல பாகங்களிலும் இவ்வாறான சூழ்நிலைகளின் போது கிளர்ந்தெழும் மக்களை அடக்குவதில் அரசாங்கங்கள் தோல்வியையே கண்டுள்ளன. இந்நிலையில் சிறிலங்கா அரசாங்கம் குடா நாட்டினுள் திட்டமிட்டு மேற்கொண்டு வரும் உணவுப் பஞ்சம் வடக்கு - கிழக்கில் நூலிழையில் தொங்கிக் கொண்டிருக்கும் அரச நிர்வாகத்திற்கு பெரும் நெருக்கடியை உருவாக்கும் என்பதில் சந்தேகப்பட ஏதுமில்லை. இவ்வாறான நெருக்கடிகள் சில கடந்த காலங்களிலும் அரச நிர்வாகத்திற்கு மக்களால் ஏற்படுத்தப்பட்டமைக்கான உதாரணங்களும் உண்டு. இந்நிலையில், மக்களைப் பட்டினி போட்டு அரசியல் சதுரங்கம் நடத்துவது அரசாங்கத்தின் நடவடிக்கை புத்திசாலித்தனமானதல்ல.

## சிறுமி மரணம்

[வடமராட்சி]

காய்ச்சல், இரத்த வாந்திபேதி நோய்க்கு இலக்காகி அரசினர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த சிறுமி கடந்த ஞாயிற்றுக் கிழமை மரணமானார்.

வியாபாரிமூலையைச் சேர்ந்த மாணிக்கம் காந்திமதி (வயது 11) என்ற சிறுமியே நோய் குணமடையாத நிலையில் வைத்தியசாலையிலேயே மரணமானார். (யோ)

## ஆதாரம் காட்டிப்பெறவும்

திறப்புக் கோர்வை ஒன்று 'பிறவுண்' வீதியில் இருந்து கண்டெடுக்கப்பட்டு ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கப் பட்டுள்ளது. உரியவர்கள் தகுந்த ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ளவும்

## கணித கற்றல் - கற்பித்தல் உபகரணம் தயாரிப்பு போட்டி

கணிதபாட கற்றல்-கற்பித்தல் செயற்பாட்டினை செயல் மூலமானதாகத் தூண்டும் வகையிலே யாழ். மாவட்ட கணித, விஞ்ஞான மூலவள நிலையம் சேவைக்கால ஆலோசகர்கள், ஆசிரியர்கள், மாணவர்களிடையே மேற்படி போட்டி ஒன்றினை நடாத்த உத்தேசித்துள்ளது. பாடசாலை கற்றல், கற்பித்தல் செயற்பாட்டில் பயன்படுத்த பயனுடையது என மதிக்கப்படும் உபகரணத் தொகுதியை செய்து ஒப்படைத்தவர்களுக்கு யாழ். மாவட்ட கணித, விஞ்ஞான மூலவள நிலையத்தின் ஓராண்டு நிறைவு விழாவில் தகைமைச் சான்றிதழ்கள் வழங்கப்படுவதுடன் தலா 2000/-க்குட்பட்ட பரிசில்களும் வழங்கப்படும். கற்பித்தல் உபகரணத் தொகுதியை 28-2-93 ஆம் திகதிக்கு முன் யாழ். மாவட்ட கணித, விஞ்ஞான மூலவள நிலையம் யா/கோப்பாய் ம. வி. கோப்பாயில் ஒப்படைக்கும்படி கணித உதவிக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

## நிவாரணத்தில் கெடுபிடி

(கொழும்பு)

நிவாரணம் வழங்கப்படுவதில் எதிர்வரும் பதினைந்தாம் திகதிக்கு பின்னர் புதிய நடைமுறை பின்பற்றப்பட இருப்பதாக மட்டக்களப்பு மாவட்ட இராணுவ இணைப்பதிகாரி பிரிகேடியர் றோகான் குணரத்தின தெரிவித்தார்.

மட்டக்களப்பு கச்சேரியில் திணைக்களத் தலைவர்கள் மாநாட்டில் கலந்து கொண்டு பேசிய அவர் மேலும் கூறுகையில் குடும்ப அட்டை வைத்திருப்பவர்களுக்கு மட்டுமே இனிமேல் நிவாரணம் வழங்கப்பட வேண்டும் என்று தெரிவித்தார்

## பழைய காசுக்கட்டளைகள்; மாற்ற நடவடிக்கை

(கொழும்பு)

பல்வேறு காரணங்களுக்காக மாற்ற முடியாமல்போயிருக்கும் சகல காசுக் கட்டளைகளையும் மாற்றிக் கொடுப்பதற்கு விசேட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. 1983-ம் ஆண்டு முதல் 1990ம் ஆண்டு வரைவிநியோகிக்கப்பட்டு இது வரை மாற்றப்படாமல் இருக்கும் சகல காசுக்கட்டளைகளும் உரிய காரணங்களுடன் பிரதம தபால் நிலையத்தில் சேர்க்கப்பட்டால் அவைமாற்றிக் கொடுக்கப்பட நடவடிக்கைமேற்கொள்ளப்பட்டுள்ளது

நீண்டகால சுகவீனம், வெளிநாடுகளில் வசித்தமைபோன்ற காரணங்களால் மாற்றப்படாமல் இருப்பவற்றிற்கு முன்னுரிமை வழங்கப்படவுள்ளது. நீதி மன்றங்களில் சமர்ப்பிக்கப்பட்ட காசுக்கட்டளைகளும் மாற்றிக் கொடுக்கப்படவுள்ளது. வழமையாக இரண்டு ஆண்டுகளுக்கு இடையில் மாற்றிக் கொள்ளாத காசுக் கட்டளைகள் செல்லுபடியற்றவையாக ஆக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

## கண்டெடுப்பு

செல்வராணிசிவசுப்பிரமணியம் என்பவரின் அடையாள அட்டை பலாலிவீதியில் கண்டெடுக்கப்பட்டு ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது உரியவர் அடையாளம் காட்டிப்பெற்றுக் கொள்ளவும்.

## வவுனியாவில் ஹமில்டன்

சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ரணதுங்க, கூட்டுப்படைத்தளகர்த்தர் ஹமில்டன் வணசிங்கா, வட பிராந்திய இராணுவத்தளபதி றொகான்தலுவத்த ஆகியோர் வவுனியாவுக்கு விஜயம் செய்து இராணுவத்தால் கைப்பற்றப்பட்ட பகுதிகளைப் பார்வையிட்டனர் என்று கூட்டுப்படைத் தலைமை அலுவலகம் அறிவித்துள்ளது.

## கிளாலி

படுகிறது.

இதனைத் தொடர்ந்து கடலில் தேடுதல் வெளிச்சம் பாய்ச்சப்பட்டு பகைத்த எறிகணை தாக்குதல் கடல்பகுதியை நோக்கி ஏவப்பட்டதை அவதானிக்க கூடியதாக இருந்ததாகவும் தெரிவிக்கப் படுகிறது (நி)

## பஞ்சம்

ஏற்கனவே 25 வீதமான குடாநாட்டு மக்கள் போதிய உணவுப் பொருள்களின்றி பாதிப்படைந்துள்ளனர். இவ்வாறான நிலை தொடர்ந்தும் நிலவினால் குடாநாடு தவிர்க்கப்படமுடியாத ஒரு பெரும் உணவு நெருக்கடிக்கு முகம் கொடுக்கவேண்டியிருக்கும் என்று அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் கருதுகிறது.

இவ்வாறான நிலை ஏற்பட்டால் குடாநாட்டில் இயங்கும் அரச சார்பற்ற நிறுவனங்கள் தமது நிவாரண, புனர்வாழ்வுப் பணிகளை நிறுத்திக் கொள்ள வேண்டிய நிலை ஏற்படலாம் என்றும் தெரிவிக்கப் படுகிறது.

மேலும் இவ்வாறான உணவுப் பஞ்ச நிலை குறித்து விரிவான தகவல்கள் அடங்கிய மகஜர் ஒன்று தயாரிக்கப்பட்டு ஜனாதிபதி பிரேமதாசாவுக்கு அனுப்பிவைப்பதற்கும் அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் தீர்மானித்துள்ளது. (க)

## ஆலங்கேணி

களில் இருந்து குடாநாட்டிற்குள் பிரவேசிக்க வந்த பல ஆயிரக்கணக்கான மக்கள் கிளிநொச்சியின் பல பகுதிகளிலுமுள்ள தமது உறவினர் வீடுகளிலும், ஆலயங்கள் மற்றும் பாடசாலைகளிலும் தஞ்சமடைந்துள்ளனர்.

இவர்கள் அப்பகுதிகளில் உணவு, உடை, தங்குமிட வசதிகள் இன்றி பெரும் துன்பங்களை அனுபவித்து வருகின்றனர்.

இவர்கள் பல நாட்களாக அங்கு தங்கி நிற்பதால் தமது நாளாந்த உணவுத் தேவைகளுக்காக கையில் உள்ள பொருள்களையும் நகைகளையும் விற்று தமது தேவைகளைப் பூர்த்தி செய்யும் பரிதாப நிலைகளை நேரில்காணக் கூடியதாகவுள்ளது. [ச,16]

## கிளிநொச்சிப் பகுதியில் நடமாடும் வைத்திய சேவை

[கிளிநொச்சி]

கிளிநொச்சி மாவட்டத்தில் பின்தங்கிய கிராமங்களில் இலங்கை செஞ்சிலுவைச்சங்கம் நடமாடும் வைத்திய சேவையை நடாத்தி வருகின்றது;

மேற்படி சங்கம் ஒக்ஸ்பாம் நிறுவனத்தின் நிதிஉதவியுடன் வைத்தியசாலை நோயாளர்களுக்கு தேவையான மருந்து வகைகளை வழங்கி வருவதுடன் புன்னை நீராவி, நல்லூர் ஆலங்கேணி, அக்கராயன்குளம் அம்பாள்நகர், இராமநாதபுரம் ஜெயபுரம் பகுதிகளில் நடமாடும் வைத்தியசேவைகளையும் வழங்கிவருகிறது இவர்களின் இத்திட்டத்தினால் முடங்கிக்கிடக்கும் நோயாளர்கள் மற்றும் வறியநோயாளர்களும் பெரும் நன்மையடைந்து வருகின்றனர். [16]

## பிறப்பு

சுமார் 400 குழந்தைகள் யாழ். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர் எனவும், இவர்களில் இருபது பேர் மரணமடைந்தனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. [நி]

## 6 மாதத்திற்கு

சஞ்சிகையோ வாசிக்கக் கிடைப்பதில்லை. வானொலிகேட்க முடியும். நாம் இரகசியமாகப் புலிகளின் குரல் வானொலியைக் கேட்டு வடக்குப் பகுதியில் நடப்பவற்றை அறிந்து கொள்கிறோம்'' இவ்வாறு புங்குடுதீவிலிருந்து யாழ்.வந்த சின்னராசா சின்னம்மா (52) தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

தீவுப்பகுதியிலிருந்து எவரும் வெளியே செல்ல அனுமதிக்கப் படுவதில்லை. எமக்கு நிவாரண உணவுகள்மட்டுமே கிடைக்கின்றன. நாம் சத்துள்ள உணவுஉண்ணமுடிவதில்லை. ஏதோ உயிரைப் பிடித்துக் கொள்ளக்கூடியதாக நிவாரணம் அமைகின்றது. பொழுது சாய்ந்தபின்னர் எவரும் எக்காரணம்கொண்டும் வெளியே வரமுடியாது.

நயினாதீவு, நெடுந்தீவு ஆகிய பகுதிகளில் இருந்து எமக்குத் தேவையான சில உணவுப் பொருள்களைப் பெற்றுக் கொள்ளுகின்றோம்.

உறவினர்களைப் பார்ப்பதானாலும் இராணுவத்திடம் அனுமதிகேட்டே செல்லவேண்டும். இங்கு நோயினால்இறப்பவர்களின் எண்ணிக்கை மிக அதிகம். ஆறுமாதத்திற்கு ஒரு முறைதான் வைத்தியர் வருவார். அப்போது தீவுப் பகுதி முழுவதிலுமுள்ள மக்களுக்கு ஒலிபெருக்கிமூலம் அறிவிப்பார்கள். அப்போது எல்லோரும் கூடுவோம். அனைவரையும் ஒரே இடத்திற்கு அழைத்துச் செல்வார்கள். அதன்பின்னர் காரைநகர் அல்லது நயினாதீவில் வைத்து வைத்திய பரிசோதனை நடைபெறும்.

எந்தவருத்தமானால் என்ன வழங்கப்படும் மருந்து பனடோல் அல்லது பரிசித்தமோல் தான். வேறு மருந்துகள் வாங்குவதற்கு வைத்தியர் துண்டு தருவார். அதனை திருக்கோணமலை செல்வோரிடம் கொடுத்து மருந்துப் பொருள்களைப்பெறவேண்டும் ஓரளவு கடுமையான சுகவீனம் என்றால் காரைநகர் வைத்தியசாலையில் அனுமதிப்பார்கள். கடுமையான வருத்தம் மகப்பேறு போன்றவற்றிற்கு அனுராதபுர வைத்தியசாலைக்கு அனுப்புகின்றார்கள்.

அனுராதபுர ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டால் அங்கு உறவினர் செல்லமுடியாது. மொழிப்பிரச்சினை அத்துடன் அங்கு சிகிச்சைபெற அச்சம் போன்ற இந்த நிலைகளினால் நோயினால் பீடிக்கப்பட்டவர்கள் தமக்கு மருத்துவ சிகிச்சை பெறத் தயங்குகின்றார்கள். அங்குள்ள அனைவரும் யாழ்ப்பாணம் வந்து இருக்க விரும்புகிறார்கள் என்றார். (நி)

## தாக்குதல் நடக்கலாமாம் உசார் நிலையில் படைகள்

நேற்று முன்தினம் காலை மாதகல் பகுதியில் விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட திடீர் தாக்குதலில் ஓர் இராணுவ அதிகாரி உட்பட பத்து இராணுவத்தினர் மரணம் அடைந்ததாகவும், ஐந்து பேர் படுகாயம் அடைந்துள்ளதாக இராணுவ தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை இன்று சிறிலங்காவின் சுதந்திர தினத்தன்று விடுதலைப் புலிகளின் தாக்குதல் நடைபெறலாம் எனவும் அதனால் வடக்கு கிழக்கில் உள்ள படையினரை உசார் நிலையில் இருக்குமாறு இராணுவ தளபதி கட்டளையிட்டதாகவும் இராணுவ தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கூட்டுப்படை அலுவலகம் தமிழர் இல்லாத இடத்திலாம்

[கொழும்பு]

அனுராதபுரத்தில் ஜெயபுர என்ற இடத்திலேயே சிறிலங்கா கூட்டுப்படைத் தலைமையகம் அமைக்கப்பட்டுள்ளதாகவும் இப்பகுதிக்குள் தமிழர் எவரும் நுழையமுடியாது எனவும் இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவ்அதிகாரி மேலும் கருத்துத் தெரிவிக்கையில் விடுதலைப் புலிகளால் கொழும்பில் கூட்டுப்படை தலைமை அலுவலகம் மீது நடாத்தப்பட்ட தாக்குதலைத் தொடர்ந்து அங்கு அச்சநிலவியதாகவும் மீண்டும் அங்கு தாக்குதல் நிகழலாம் எனவும் இரகசியத் தகவல்கள் இடைத்ததைத் தொடர்ந்துமே கூட்டுப்படைத் தலைமையகம் அனுராதபுரத்திற்கு மாற்றப்பட்டது.

அனுராதபுரம் விமானப் படைத் தளத்தின் ஒரு பகுதியில் ஜெயபுர என்ற இடத்திலேயே இதனை அமைத்துள்ளோம்.

இவ் இடம் தெரிவுசெய்யப்பட்டதன் காரணம் இப்பகுதிகளில் வெளியார் எவரும் நடமாடமுடியாது. இங்கு முப்படைகளினதும் பாதுகாப்புகள் பலமாகவுள்ளன. இவை ஒன்றுக்கொன்று பாதுகாப்பாக நிறுவப்பட்டுள்ளன.

இப் பகுதிகளில் சிங்கள மக்களே முழுமையாக வாழுகின்றனர். அதனால் தமிழர் எவரும் இலகுவில் அவ் இடத்தை நெருங்கவோ நடமாடவோ முடியாது விமானப் போக்குவரத்திற்கு உரிய சகல வசதிகளும் அங்கு உள்ளன என்றார்.

## 30வீத சம்பள அதிகரிப்பு படையினருக்கும் கிடைக்கும்

(கொழும்பு)

வரவு செலவுத் திட்டத்தின் மூலம் அதிகரிக்கப்பட்ட முப்பது சதவீத சம்பள உயர்வு பாதுகாப்புப் படையினருக்கு கிடைக்க இருப்பதாகதெரிவிக்கப்பட்டுள்ளது.

1993 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் அமுல்படுத்தப்பட்ட இந்த சம்பள அதிகரிப்பு ஆரம்பத்தில் படையினருக்கு வழங்கப்படவில்லை என்றும், தற்போது படையினரின் இச் சம்பள அதிகரிப்பிற்கு ஜனாதிபதி மற்றும் மந்திரி சபையின் ஒப்புதல் கிடைத்திருக்கிறது என்றும் எனவே இத் தச் சம்பள அதிகரிப்பு உடனடியாக அமுலுக்குவரும் என்றும் தெரியவருகிறது.

## தீவுப்பகுதிக்கான தபால்கள் இங்கிருந்தே அனுப்ப ஏற்பாடு

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணக் குடாநாட்டில் இராணுவக்கட்டுப்பாட்டிற்குட்பட்ட பிரதேசத்தில் வாழ்பவர்களுக்கு இனிமேல் மாதம் இருமுறை யாழ்ப்பாணம் ஊடாக தபால்களை எடுத்துச் செல்ல ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாக வடமாகாண பிரதி அஞ்சல் அதிபர் நாயகம் எஸ். எம். சேதுகாவலர் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் முன்பு இந்தத் தபால்கள் யாவும் கொழும்புக்கு அனுப்பப்பட்டு அங்கிருந்து அனுராதபுரம் ஊடாகவே இப்பிரதேசத்திற்குச் சென்றதாகவும், தற்போது சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் ஊடாக யாழ்ப்பாணத்திலிருந்து நேரடியாக தபால்களை எடுத்துச் செல்லஏற்பாடாகியிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

இராணுவக் கட்டுப் பாட்டுப் பகுதிக்குள் வசிப்போருக்கான தபால்களைச் சேர்க்க விரும்புவோர் குறிப்பிட்ட தபால் அலுவலகத்தின் பெயருடன் 'நியம' அல்லது Proper என எழுதுமாறும் கேட்டுக்கொண்டார். இப்படிக் குறிக்கப்படாவிட்டால்அவை இங்கு இயங்கும் குறிப்பிட்ட பகுதிக்குரிய தபாலகங்களில்சேர்க்கப்படும் எனவும் தெரிவித்தார்.

## மரண அறிவித்தல்

## சுப்பிரமணியம் காளிக்குட்டி

(பத்தர்)

திருக்கோணமலை திரியாயைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகக் கொண்ட காளிக்குட்டிப் பத்தர் 106 ஜின்னா வீதி, இல்லத்தில் 3 - 2 - 93 அன்று காலமானார். இவர் தங்கம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற கார்த்திகேசு, காலஞ்சென்றகந்தையாப் பத்தர், காளிப்பிள்ளை ஆகியோரின் அன்புச்சகோதரரும், நாகராசா (பிரான்ஸ்), சுப்பிரமணியம் (சன்ஸ்டார் ஜுவலறி), நிர்மலாதேவி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சுந்தராம்பாள், சியாமளாதேவி, தங்கத்துரை (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், லஜிதா, தர்சினி, மதனராஜா, நிருஜா, சாருஜா, சிவச்செல்வன், தேவகுமார், நிர்மலதேவன், ஆகியோரின் அன்புப பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியை இன்று [4 - 2 - 93] 10-30 மணியளவில் யாழ்ப்பாணம் கோம்பையன்மணல்மயானத்தில் நலடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சுப்பிரமணியம் (மகன்)

[4214]

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 04ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## விநாயகர் உருவில் பிறந்த குழந்தை

[பஞ்சாப்]

இந்தியாவின் பஞ்சாப் மாநிலத்தில் அமிர்சரஸ் நகரில் பிறந்த குழந்தை ஒன்றுக்கு இந்துக்களின் தெய்வங்களில் ஒன்றான யானை முகம் கொண்ட விநாயகர் போன்ற நீண்ட மூக்கும் தந்தம் போன்ற இரு நீண்ட பற்களும் முளைத்துள்ளன.

இது விநாயகரின் மாறுவடிவம்தான் என நம்புகின்ற மக்கள் இக்குழந்தையை வழிபட ஆரம்பித்துள்ளார்கள் என்றும் இந்துமத குருமார்களும் இந்த வழிபாட்டில் ஈடுபடுகின்றார்கள் என்றும் யு.என் ஐ.செய்தி தெரிவித்துள்ளது.

## முரசொலி ஊழியருக்கு சேமலாபநிதி கொடுப்பனவு

முரசொலி நிறுவனத்தில் கடமையாற்றியஊழியர்களின் சேமலாபநிதிக் கொடுப்பனவுகள் எதிர்வரும் ஏழாம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு முரசொலி காரியாலயத்தில் வைத்து வழங்கப்படவுள்ளதாக விடுதலைப் புலிகள் யாழ் மாவட்ட அரசியல்துறைச் செயலகம் விடுத்த செய்திக்குறிப்பொன்று தெரிவிக்கின்றது.

ஊழியர்களின் சம்பளத்தில் இருந்து ஊழியர் சேமலாப நிதிக்கொடுப்பனவு கழிக்கப்பட்டிருந்தும் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு அனுப்பப்படாமல் பாதிக்கப்பட்ட ஊழியர்களுக்கே இக்கொடுப்பனவுகள் வழங்கப்பட இருப்பதாக அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## ராஜீவ் கொலை விசாரணை 17-ம் திகதிக்கு ஒத்திவைப்பு

(சென்னை)

ராஜீவ் காந்தி கொலை வழக்கு விசாரணை நேற்றுப் பூந்தமல்லியில். இந்தவழக்கை விசாரிக்கும் சிறப்பு நீதிபதி எஸ். எம். சித்திக் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.பாதுகாப்பு ஒழுங்குகள் பலப்படுத்தப்பட்டிருந்தன.

இவ் வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட 26 பேர் நீதிபதிமுன் ஆஜர் செய்யப்பட்டனர். அவர்கள் அனைவரையும் இம் மாதம் 17ஆம் திகதி வரை காவலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார். வழக்கு விசாரணை இம்மாதம் 17ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

## இடம் பெயர்ந்தோருக்கு ஜேர்மன் நிதி உதவி

இடம் பெயர்ந்தவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு ஜேர்மன் பொருளுதவித் திட்டத்தில் 26கோடி 50 இலட்சம் ரூபா வழங்கப்படவுள்ளது.

இடம் பெயர்ந்தவர்களுக்குத் தங்கும் இடங்களை அமைத்துக் கொடுப்பதற்கும், நீர் வழங்குவதற்கும், சுகாதாரக் கல்வி, மின்விநியோகவசதிகளைச் செய்து கொடுப்பதற்கும் இந்த நிதிஉதவி பயன்படுத்தப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## இந்திய சதிநாச செயல் கண்டித்து ஊர்வலம்

தளபதி கேணல் கிட்டு உட்பட பத்துப்போராளிகளின் மரணத்துக்கு காரணமாக செயற்பட்ட இந்திய அரசிற்கு கண்டனம் தெரிவித்து தென்மராட்சியில் கண்டனப் பேரணியும் கண்டனக் கூட்டம் ஒன்றும் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இப்பத்துப் போராளிகளது உருவப்படங்களைத் தாங்கிய ஊர்தி ஒன்றைத் தொடர்ந்து இக் கண்டனப் பேரணி நகர்ந்தது.

சாவகச்சேரி நகரில் இருந்து மீசாலை மாவடிப்பிள்ளையார் ஆலயம் வரை இக்கண்டனப் பேரணி சென்றது. இப்பேரணியில் நரசிம்மராவ், ஜெயலலிதா ஆகியோரது கொடும்பாவிகள் எடுத்துச் செல்லப்பட்டு மேற்படி ஆலய முன்றலில் வைத்து எரிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து இவ் ஆலய மைதானத்தில் கண்டனக் கூட்டம் நடைபெற்றது. இக் கூட்டத்தில் விடுதலைப் புலிகளின் பல பிரமுகர்கள் கண்டன உரைகளை நிகழ்த்தினர்.

## பல்கலை. ஆசிரியர் போராட்டம் நிறுத்தம்

(கொழும்பு)

பல்கலைக்கழக ஆசிரியர் சம்மேளனம் தொழிற்சங்க நடவடிக்கையைக் கைவிட்டுள்ளது. நீதி மற்றும் உயர் கல்வி அமைச்சர் ஹமீதைச் சந்தித்த போது இந்த முடிவுக்கு வரப்பட்டது

இரு தரப்பினருக்கும் இடையில் உண்டான இணக்கத்தின் படி, பல்கலைக்கழக ஆசிரியர்கள் பொதுவான சம்பள அதிகரிப்புடன் அடிப்படைச் சம்பளத்தில் 25 வீத உயர்வைப் பெற இருக்கிறார்கள்.

இந்த ஆண்டு ஜனவரி முதலாம் திகதியிலிருந்து ஆண்டு ஒன்றுக்குப் 10,000 ரூபா புத்தகங்களுக்கான படியாகக் கிடைக்க இருக்கிறது

அடுத்த ஆண்டு ஜனவரி மாதத்திலிருந்து பல்கலைக்கழக ஆசிரியர்களின் தரத்தினை அடிப்படையாகக் கொண்டு மேலும் 10 சத வீதமாக இந்தப்படி அதிகரிக்கப்படும். நிறைவேற்றப்படாத பணிகளுக்காக வழங்கப்படும் படி அடுத்த ஆண்டு டிசம்பர் 31ஆம் திகதி வரை வழங்கப்படும்.

மாற்றி அமைக்கப்பட்ட சம்பள விகிதம் 1995 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதிக்கு முன் அமுலுக்கு வரும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## தமிழ்நாட்டில் மீண்டும் வெடிகுண்டு கலாசாரம்

-வாழப்பாடி

தமிழ் நாட்டில் மீண்டும் வெடிகுண்டுக் கலாசாரம் தலைதூக்கிவிட்டதாக தமிழக காங்கிரஸ் கட்சித் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி குற்றம் சாட்டியுள்ளார்.

தமிழ் நாட்டில் மீண்டும் விடுதலைப் புலிகளின் வெடிகுண்டுக் கலாசாரம் தலைதூக்கத் தொடங்கியிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

### பதவி வெற்றிடம்

### புத்தகம் கட்டுபவர் தரம் 11 பதவி

பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து புத்தகம் கட்டுபவர் தரம் 11 பதவிக்கான விண்ணப்பங்கள் 1993-02-26 ஆம் திகதி வரை என்னால் ஏற்றுக் கொள்ளப்படும்.

சம்பளத்திட்டம்:
ரூபா 1865-11 X 40-2305 (இவை தவிர அரசாங்கத்தினால் வழங்கப்படும் வாழ்க்கைச் செலவுப்படியுட்பட ஏனைய படிகளும் 15% சம்பள அதிகரிப்பும் வழங்கப்படும்.)

கல்வித்தகைமை:
எட்டாம் வகுப்பில் சித்தியடைந்தவராக இருப்பதுடன் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் குறைந்த பட்சம் 5 ஆண்டுகள் புத்தகம் கட்டுதலில் அனுபவமுடையவராக இருத்தல் வேண்டும்.
அல்லது
ஏழாம் வகுப்பு சித்தியுடன் பல்கலைக்கழக மானியங்கள், ஆணைக்குழுவில் அல்லது உயர் கல்வி நிறுவனமொன்றில் குறைந்தபட்சம் 10 ஆண்கள் சேவையாற்றியிருப்பதுடன் புத்தகம் கட்டுதலில் அறிவையும் கொண்டிருத்தல் வேண்டும்,

வயது:
விண்ணப்ப முடிவு திகதியில் 40 வயதிற்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும்.

தெரிவு:
தொழிற் தேர்வும் நேர் முகப்பரீட்சையும்.

மேற்படி பதவிக்கான விண்ணப்பப்படிவங்களை ரூபா 20/- நிதிக்கிளையில் செலுத்தி இப்பல்கலைக் கழகத்தின் சிரேஷ்ட உதவிப்பதிவாளர் / தாபனக்கிளையிலிருந்து பெற்றுக் கொள்ளவேண்டும். தபால் மூலம் விண்ணப்பப்படிவங்களைப் பெறவிரும்புவோர், அதற்கான வேண்டுகோளுடன் ரூபா 20/-க்கான காசுக்கட்டளை / தபாற் கட்டளையுடன் 23 X 10 ச.மீ அளவுடையதும் சுயமுகவரியிடப்பட்டதும் ரூபா 1/- முத்திரை ஒட்டப்பட்டதுமான கடித உறையை அனுப்புதல் வேண்டும்.

அரசாங்கத்திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்டசபைகள் ஆகியவற்றில் பணியாற்றும் விண்ணப்பதாரிகள் தங்களது விண்ணப்பங்களை தமது நிறுவனங்களின் தலைவர்களூடாக அனுப்புதல் வேண்டும். இவ்விண்ணப்பதாரிகளுக்கு வயதெல்லை கட்டுப்பாடாக அமையாது.

விண்ணப்பமுடிவு திகதியின் பின்னர் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்களும், இப்பல்கலைக்கழகத்தின் தாபனக்கிளையிலிருந்து பெறப்படாத படிவங்களில் அனுப்பப்படும் விண்ணப்பங்களும், கேட்கப்பட்ட விபரங்கள் தெளிவாகக் குறிப்பிடப்படாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

பதிவாளர்:
யாழ். பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி.
1993-01-30 (சி 5934)